
உ

சிவமயம்



மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த

# அமரர் திருமதி. இந்திராதேவி சிவகுமார்


(ஓய்வுபெற்ற ஆங்கில பட்டதாரி ஆசிரியை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20.01.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த

அமரர்

# திருமதி.இந்திராதேவி சிவகுமார்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

20.01.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மாணிக்கமாய், பண்பின் சீலமாய்

கருணையின் வள்ளலாய்

அன்பினால் எங்களை

பேணிக்காத்து எம்மை

நல்வழி நடாத்தி வாழ்ந்து காட்டி

எம்மை வாழவைத்த

எமது அன்புத் தெய்வத்துக்கு

இம் மலரினைக் காணிக்கையாகச்

சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மறைவு
21+12+2010

# அமரர் திருமதி. இந்திராதேவி சிவகுமார்

அவர்கள்

## திதி வெண்பா

நிறைவுறும் விகிர்தியாண்டதனில் மார்கழி மாதம்
அபரபக்க பிரதமை திதியதனில் பார்புகழும்
இந்திராதேவி இல்லறவாழ்வை நிறைவு செய்து
வானவர் உலகம் ஏய்தனன் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னை சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்குழல் போற்றி போற்றி.

# திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளக்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரதம்



## பிரதோஷ மகிமை

இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான பூஜைகள் நடத்தப் பெறுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாகக் கருதப் படுவது பிரதோஷநாள் வழிபாடாகும். உணவை அதற்கென்று குறிப்பிடப் பட்டுள்ள நேரத்தில் உண்கின்ற போதுதான் முழுப்பயனையும் அடைய முடியும். அதுபோல இறைவனை எப்பொழுது பூஜித்தாலும் பலன் உண்டு என்றாலும், சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பூஜித்தால் முழுப்பலனை அடையமுடியும் என்பது உண்மையாகும். இது அனுபவத் தால் தெளிவாக அறிந்த ஒன்றாகும்.

பலர் பிரதோஷ வழிபாட்டின் மூலம் பலவகைத் தடைகள் விலகப்பெற்று, பெறுதற்கரிய செல்வங்களைப் பெற்று மகிழ்ந்திருக் கிறார்கள். இவ்வுண்மையைப் புராணவரலாறு நமக்கு விளக்குகிறது.

## பிரதோஷ காலம்

பொதுவாகப் பிரதோஷ காலம் என்றால் பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும், நட்சத்திரங் களும் தோன்றும் நேரம் வரை என்று கூறுவர். இதை மிகவும் துல்லிய மாகக் கணக்கிட்டு மாலை 05.45 மணிக்கு மேல் 06.30 மணிக்குள் என்று பிரதோஷ காலத்தைச் சாஸ்திர அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13 ஆம் நாளும், பௌர்ணமியில் இருந்து 13 ஆம் நாளும் திரயோதசி திதியாகும். அன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பிரதோஷ நாள். ஆக மாதத்திற்கு இரண்டு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

## வழிபடும் முறை

பிரதோஷ நாளன்று அதிகாலை எழுந்திருத்தல் வேண்டும். காலைக் கடன்களை முடித்து, சிறப்பாக இறைவன் நாமவளிகளைக் கூறி பூசித்தல் வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது.

ஆலயம் சென்று லிங்கமூர்த்திக்கும் அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம், ஆராதனை செய்யலாம். எப்போதும் இறைவனையே சிந்தை செய்யவேண்டும். சிவபுராணத்தைச் சொல்லிக் கொண்டிருத்தல் மிகவும் நல்லது.

சிறப்பாக நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலயம் சென்று மாலையில் சிவபிரானுக்கும், ரிஷப தேவருக்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். ரிஷப தேவருக்கு அறுகம்புல் மாலை அணிவிக்க வேண்டும், மாவினால் அகல் செய்து, தூய்மையான பசு நெய் விட்டு விளக்கு எரித்தல் வேண்டும். காரரிசியில் வெல்லம் கலந்து ரிஷபதேவருக்குப் படைத்தல் வேண்டும். ரிஷபதேவரின் கொம்புகளுக்கு இடையே பார்த்துச் சிவபிரானைத் தரிசித்தல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் மட்டும், வழக்கமாக வருவதுபோல் ஆலயப்பிரதட்சணம் வருதல் கூடாது. அப்ரதட்சணம் வருதல் வேண்டும். இதைச் சோமசூத்ரபி ரதட்சணம் என்பர்.

ரி - ரிஷபம்
ச - சண்டிகேசுவரர்
கோ - கோமுகை

ரிசரி கோ
ரி ச கோ
ரி ச ரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயுள்ள குறியெழுத்துக்கள் ஒரு முறைவரும் அப்ரதட்சணத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது, இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகியைக் கடவாது, முன் சென்ற வழியே திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்று திரும்பி இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று கோமுகியைச் சேர்ந்து அங்கு நின்று திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி சிவபெருமானைத் தரிசித்து வணங்குதல் வேண்டும். இது ஒரு பிரதக்ஷிணம் ஆகும். இதுபோல் மூன்று முறை பிரதக்ஷிணம் செய்தல் வேண்டும்.

பின்னர், சிவபிரான் உமாதேவியாருடன் ரிஷபாரூடராய், பிரதோஷ நாயகராய் பிரதோஷ காலத்தில் (மணி 5.45 முதல் 6.30 வரை) ஆலய வலம் வரும்பொழுது கண்டு தரிசித்தல் மிகப்பெரிய புண்ணியமாகும்.

வேதபாராயணத்துடன் முதலிலும், திருமுறை பாராயணத்துடன் இரண்டாவதும், நாதசுர மங்கல இசையுடன் மூன்றாவதுமாக மூன்று முறை ஆலய வலம் நடைபெறும். இரண்டாவது வலம் வரும் பொழுது இறைவனையும், இறைவியையும் ஈசான திக்கில் இருந்தருளச் செய்வார்கள். அப்பொழுது காட்டும் கற்பூர ஆரத்தியைக் கண்டு தரிசிப்போருக்கு மிகுந்த பலனுண்டு. தரிசனம் செய்த பின்னர் வீடு சென்று, ஒருவர் இருவருக்கு அன்னமிட்டு, பிறகு தாமும் உண்டு பிரதோஷ விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

சனிப்பிரதோஷத் தரிசனத்தில் தனிச்சிறப்பும் பலனும் உண்டு. அதை மகாப்பிரதோஷம் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதோஷ தரிசனப் பலன்

பிரதோஷ காலம் என்றாலே பாவங்களைப் போக்கி நல்ல பலன்களைத் தரும் புண்ணிய காலமாகும். அக்காலத்தில் சந்திரமௌலீசுரரைத் தரிசிப்பதால் தோஷங்கள் எதுவாக இருந்தாலும் உடனே விலகும். பயவுணர்வு, அச்சம், குழப்பம், தீராப்பிணிகள் மறையும். மனநலம், உடல் நலம், வாக்குநலம் வளம்பெறும். வருகின்ற செய்திகள் எல்லாம் நல்லதாகவே வரும். மங்கலச் செயல்கள் தொடரும், சாதனை கள் புரிய வாய்ப்பும், வல்லமையும் உண்டாகும். கீழே பிரதோஷ தரிசனத்தால் உண்டாகும் பலன்களுக்கு எடுத்துக் காட்டாகச் சாண்டில்ய முனிவர் கூறியிருக்கும் ஒரு வரலாறு கூறப்பட்டிருக்கின்றது.

## வரலாறு

முன்னொரு காலத்தில் விதர்ப்பநாட்டில், ஒரு கைக்குழந்தைக்குத் தாயாக மிகவும் வறுமை நிலையில் ஓர் அந்தணப் பெண்மணி வாழ்ந்து வந்தாள். சிவபக்தி உடையவள். கணவனை இழந்த அவள் ஒரு நாள், கைக்குழந்தையுடன் காட்டுவழியே சென்று கொண்டிருந்தாள்.

ஒரு குழந்தை அனாதையாக அழுதுகொண்டிருப்பதைக் கண்டு அப்பெண் உள்ளம் உருகினாள். அப்பொழுது வானில் அசரீரி மொழி எழுந்தது. அக்குழந்தை அரசகுமாரன் என்றும், பெயர் தர்மகுப்தன் என்றும், அதைத் தூக்கிச் சென்று வளர்க்கும்படியும் அதனால் அவளுடைய துன்பமெல்லாம் நீங்கும் என்றும் அசரீரி வாக்குக் கூறியது. எல்லாம் இறைவன் செயல் என்று நம்பியே அவள் அக்குழந்தையைத் தூக்கிச் சென்றாள்.

குழந்தை வளர வளர பெண்மணியின் வறுமை மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது. உரிய பருவத்தில் இருவருக்கும் உபநயனமும் செய்து வைத்தாள்.

ஒருமுறை இரு குழந்தைகளுடனும் சாண்டில்ய முனிவரின் தரிசனத்திற்காக அந்தணத்தாய் சென்றாள். முனிவரை மனமுருகத் தரிசித்தாள். குழந்தைகள் பற்றியும் தன்நிலை பற்றியும் முனிவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். அவர் சிவமூர்த்திக்கு மிகவும் உகந்ததாகிய பிரதோஷ தரிசனம் தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் துன்பங்கள் மறைந்து நல்வாழ்வு மலரும் என்று ஆசி வழங்கினார்.

பெண்மணி முனிவர் கூறியபடியே பிரதோஷப் பூஜை சிறப்பாகச் செய்து தரிசனமும் செய்து வந்தாள்.

ஒருமுறை அத்தாயின் இருபிள்ளைகளும் வெளியே சென்றிருந் தார்கள். அப்பொழுது அந்தணச் சிறுவன் தங்கம், நவரத்தினம், பொற் காசுகள் நிரம்பிய குடத்தைப் புதையலாகக் கண்டெடுத்தான். இருவரும் கொண்டுவந்து அன்னையிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னார்கள். அவள் இருவரையும் பங்குபோட்டு எடுத்துக் கொள்ளும்படி சொன்னாள். தர்மகுப்தனோ அதை அண்ணன்தான் கண்டெடுத்தான். அண்ணனுக்கே அது உரியது; எனக்கு வேண்டாம் என்று சொன்னான். இதனால் தர்மகுப்தன் தங்களை விட்டுப்போய்விடுவானோ என்று அஞ்சினாள் அத்தாய். மகனோ என்றும் தாயைப் பிரியேன் என்றும் பரிவுடன் கூறினான்.

ஒருமுறை காட்டுப் பகுதியில் தன் தோழியருடன் குளத்தில் நீராடிவிட்டு வெளிவந்த ஓர் மங்கையைக் கண்டு தர்மகுப்தன் உள்ளத் தைப் பறிகொடுத்தான். அவளும் அவனை விரும்பினாள் அவள் ஒரு கந்தர்வ மன்னனின் மகள். பெயர் அஸ்ருமதி.

பூலோக வாசிகளைத் தேவர்குலத்தைச் சார்ந்த கந்தர்வப் பெண்கள் திருமணம் செய்துகொண்டு வாழும் முறை கிடையாது. அதனால் அதிர்ச்சியுற்ற கந்தர்வ மன்னன் கயிலாயம் சென்று பரமனைத் தரிசித்துத் தன் மகளின் காதல் செய்தியைக் கூறி முறையிட்டான். அதைக் கேட்டருளிய பரமன், தர்மகுப்தன் க்ஷத்திரியன் என்றும், அவனுக்கு அஸ்ருமதியைத் திருமணம் செய்து வைத்து இழந்த நாட்டை மீட்க படையுதவியும் செய்யும்படி கூறினார்.

கந்தர்வ மன்னன் சிவபெருமான் கூறியபடியே செய்தான். இழந்த நாட்டை மீண்டும் பெற்று தர்மகுப்தனும், அஸ்ருமதியும் அரசன் அரசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனார்கள். தன்னை அன்புடன் வளர்த்த தாயையும், சகோதரனையும் முன்னிலும் அதிகமாக நேசித்து அவர்களுக்கு அரச வாழ்க்கை கொடுத்தான்.

சாண்டில்ய முனிவர் தர்மகுப்தன் அரண்மனைக்கு எழுந்தருளி னார். அவரைப் பயபக்தியுடன் வரவேற்று உபசரித்தான் தர்மகுப்தன். பிறகு தான் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தும், கொடிய துன்பத்திற்கு ஆளானதேன்? என்று அவன் முனிவரிடம் கேட்டான். அதற்குத் தந்தை செய்த பாவமே காரணம் என்றும், அந்தணத் தாயுடன் தர்மகுப்தனும் பிரதோஷ பூஜை, தரிசனம் செய்து வந்ததால் பாவம் நீங்கி, புண்ணியம் மலர்ந்து இழந்த அரசும் கிடைத்தது என்று கூறினார்.

**சனிப்பிரதோஷமாகிய மகா பிரதோஷ மகிமை கூறும் வரலாறு (வரதுங்க பாண்டியர் அருளியது)**

ஒரு காலத்தில் சந்திரசேனன் என்னும் அரசன் உஜ்ஜனியை ஆண்டு வந்தான். ஸ்ரீ மாகாளேசுரரை வணங்கும் விரதம் பூண்டவன் ஒருமுறை மாணிபத்திரன் என்னும் கணநாதன் ஒருவன் வந்து அவனுடன் நட்புப் பூண்டான். அவன் பிரியும் போது நட்புக்கு அடையாளமாகச் சிந்தாமணி என்னும் ரத்தினத்தை அளித்துச் சென்றான்.

சந்திரசேனனின் பகைவர்கள் ஒன்றுசேர்ந்த அந்த ரத்தினத்தைக் கைப்பற்ற எல்லையில் வந்து முற்றுகை இட்டனர். சிவபிரானையே பெரும்பலமாகக் கருதும் சந்திரசேனன் ஆலயம் சென்று ஸ்ரீ காளேசுரரை எண்ணித் தியானம் செய்தான். அன்று சனிப்பிரதோஷம்.

ஒரு பெண்மணி, அப்பொழுதான் இளம் மகனுடன் வந்து ஸ்ரீ காளேசுரரை வணங்கிச் சென்றாள்.

தாயுடன் இல்லம் சென்ற சிறுவன், மன்னன் ஆலயத்தில் செய்த தியானத்தைப்போல் தானும் கற்பனையாகச் செய்ய எண்ணி, ஏதோ ஒரு கல்லைத் தன்முன் லிங்கமாக வைத்துக் கண்களை மூடிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். அப்பொழுது அன்னை உணவுண்ண அழைத்தாள். அவன் போகவில்லை. அதனால் அங்கு வந்த தாய் கடுங்கோபத்துடன், சிறுவன் லிங்கமூர்த்தியாகப் பாவனை செய்த கல்லைத் தூக்கி எறிந்துவிட்டுச் சென்றாள். அதைக் கண்ட சிறுவன் மூர்ச்சித்து விழுந்தான்.

சிறிது நேரத்தில் கண்விழித்த சிறுவன் தனக்கு முன் நவரத்தின லிங்கமூர்த்தி ஜொலிப்பதையும் வீடெல்லாம் செல்வவளம் செழித்திருப் பதையும் கண்டு அதிசயித்தான். தாய் மகிழ்ந்து, அன்று சனிப்பிரதோஷ நாளாகையால் தன் மகன் செய்த பிரதோஷநாள் பூஜை பலனே செல்வ வளத்திற்குக் காரணம் என்று தன் செயலுக்கு வருந்தினாள்.

சிறுவன் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்று மன்னன் சந்திரசேனன் வந்து சிறுவன் முன் இருந்த லிங்கமூர்த்தியை வணங்கி னான். இதையெல்லாம் ஒற்றர் மூலம் அறிந்த மன்னனின் பகைவர்கள், எல்லாவற்றிற்கும் சந்திரசேனன் செய்த சனிப்பிரதோஷ மகிமையே காரணம் என்று நம்பி பகைமையை விட்டு நட்புப் பூண்டனர்.

இதுவரை பிதோஷ விளக்கம், மகிமை, பலன், பயனடைந்தோர் வரலாறுகள் ஆகியவற்றை முறையாக அறிந்தீர்கள்.

### இப்பொழுது பிரதோஷ பூஜை தோன்றிய வரலாறு

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே அடிக்கடி போர் நிகழும். அசுரர்களினால் தங்கள் குலம் அழிந்து விடுமோ என்ற அச்சம், பயம், குழப்பம், தேவர்களின் உள்ளத்தை வாட்டியது. முதுமை, மரணம் தங்களை அணுகாமல் என்றும் இளமையோடு நித்திய ஜீவிகளாக வாழ ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று திட்டமிட்டனர்.

தேவர்கள் அனைவரும் சென்று பிரம்மாவிடம் தங்கள் திட்டத்தைத் தெரிவித்தனர். பிரம்மா அனைவரையும் அழைத்துக் கொண்டு திருமாலிடம் சென்று தேவர்களின் கருத்தை வெளியிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலைக் கடைந்து, அதிலிருந்து வரும் அமிர்தத்தை உண்டால் முதுமை, மரணம் இன்றி என்றும் இளமையோடு வாழலாம் என்று திருமால் கூறினார்.

திருமால் குறிப்பிட்டபடி அமிர்தம் பெறமுடிவு செய்யப்பட்டது. மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைய பிரும்மாவும், தேவர்களும் ஏற்பாடு செய்தனர். அசுரர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் கலந்து கொள்ள வந்தனர்.

திருமால் தந்திரமாக, தேவர்கள் வால்பக்கமும், அசுரர்கள் தலைப் பக்கமும் நின்று பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய்தார். திருமால் ஆமை வடிவெடுத்து கடலுக்கடியில் சென்று மந்தரமலையைத் தாங்கினார்.

தேவரும், அசுரரும் திருப்பாற்கடலைக் கடையத் தொடங்கியது தசமிதிதி காலையிலாகும்.

தொடர்ந்து கடைந்து கொண்டே இருந்தனர். இரவு கழிந்து, அடுத்த நாள் ஏகாதசி காலையில் வாசுகி வலி பொறுக்க முடியாமல் விஷத்தைக் கக்கியது. கடலில் இருந்தும் விஷம் தோன்றியது. ஆலம் என்றால் விஷம். வாசுகியின் ஆலமும், கடலில் தோன்றிய ஆலமும் சேர்ந்து ஆலாலமாகி புகைமண்டலம் போல் வடிவெடுத்தது. அதன் அனல் கொடுமை தாங்கமுடியாமல் தேவர்களும், மற்றவர்களும் சிதறி ஓடினர். ஆமை வடிவம் விடுத்து மேலே வந்த திருமாலின் பளிங்கு நிறமும் விஷப் புகையால் கருநிறமாக மாறியது. சிவபிரானிடம் புகலிடம் அடைய திருமால், பிரம்மா, தேவர்கள் ஆகியோர் கயிலை நோக்கி ஓடி வலமாகச் செல்ல முயன்றனர்.

அவர்கள் கயிலையை வலம் செல்ல முடியாமல் விஷமண்டலம் பரவித் தடுத்தது. அதனால் அப்ரதட்சணம் இட்டு ஓடினர். சிறிது தூரம் சென்றதும் அங்கும் வந்து விஷமண்டலம் தாக்கவே மீண்டும் திரும்பி ஓடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். இப்படித் தேவர்கள் அன்று கயிலையை அப்ரதட்சணம் வந்த காரணத்தால்தான் சிவாலய பிரதோஷ நாளன்று இன்று அப்ரதட்சணம் வரும் முறை பின்பற்றப்படுகின்றது. இதுவே சோமசூத்ர பிரதட்சணம் ஆகியது.

பிறகு தேவர்களில் ரிஷப தேவரின் உதவியுடன் பரமனைத் தரிசனம் செய்தனர். தங்கள் செயலையும், ஆலாலத்தின் கொடுமையை யும் கூறித் தங்களைக் காக்கும்படி வேண்டிக் கொண்டனர். கருணையே வடிவான எம்பெருமான் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டார்.

அருகே அணுக்கத் தொண்டராக நின்ற சுந்தரரிடம் ஆலாலத்தைத் தாங்கிவரும்படி பணித்தருளினார். அவர் சென்று விடத்தை நாவற்பழம் வடிவில் திரட்டிப் பரமனிடம் கொண்டுவந்து தந்தார்.

பரமன் அவ்விடத்தைத் திருவாயில் இட்டு விழுங்கக் தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். அவ்விஷம் உள்ளே சென்றால் அங்கிருக் கும் எண்ணற்ற ஜீவகோடிகள் அழிந்துவிடும். உமிழ்ந்தாலும் புறவுலகி லுள்ள ஜீவகோடிகள் அழிந்துவிடும். இந்த நிலையில் பக்கம் இருந்த உமாதேவியார், தம் இளந்தளிரன்ன கரத்தினால் கண்டத்தில் மெல்ல அழத்தித் தடவ, விஷம் மேலும் செல்லாமல் தங்கி அம்பிகையின் மகிமையால் அமிர்தத்தன்மை பெற்றது. அன்று முதல் சிவபிரான் “மணிகண்டன்” என்றும், “திருநீலகண்டன்” என்றும் அழைக்கப்பெற்றான். தேவர்கள் அச்சம் நீங்கினர். பின்னர் மீண்டும் சென்று பாற்கடலைக் கடையுமாறு சிவபிரான் திருவாய் மலரத் தேவர்கள் அங்கிருந்து சென்றனர்.

ஏகாதசி திதியில் மீண்டும் தேவர்களும், அசுரர்களும் பாற்கட லைக் கடையத் தொடங்கினர். இரவு முழுவதும் கடைந்துகொண்டே இருந்தனர்.

முதலில் பாற்கடலில் இருந்து வெளிப்பட்ட இலக்குமியைத் திருமால் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளிப்பட்ட ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு. சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சைச்வரம் என்ற குதிரை முதலியனவற்றை இந்திராதி தேவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஏகாதசி இரவு கழிந்து மறுநாள் துவாதசி அன்று அதிகாலையில் கடலில் இருந்து அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்து உண்டனர். அமிர்தம் உண்ட மகிழ்ச்சியில் அன்று முழுவதும் தேவர்கள் ஆடியும் பாடியும் பொழுது போக்கினர்.

மறுநாள் திரயோதசி (13 ஆம் நாள்) அன்று தேவர்கள், முதலில் சிவபிரானை வணங்காமல் ஆடியும், பாடியும் பொழுது போக்கியதற்காக வருந்தினர். அனைவரும் சென்று பரமனிடம் தங்கள் குற்றத்துக்காக மன்னித்து விடுமாறு வேண்டினர். பரமன் தயாநிதி அல்லவா?

தேவர்களை மகிழ்விக்கத் திருவுளங்கொண்ட பரமன், அம்பிகை காணும்படி ரிஷபதேவரின் கொம்புகளுக்கிடையே நின்று ஆனந்த தாண்டவம் ஆடியருளினர். அதனால்தான் பிரதோஷ நாளன்று, ரிஷப தேவரின் கொம்புகளுக்கிடையே பார்த்து லிங்கமூர்த்தியைத் தரிசிக்கும் முறை பின்பற்றப்படுகின்றது. அவர் ஆடிய நேரமே பிரதோஷ வேளை.

ஆண்டவனின் திருநடனம் கண்ட தேவர்கள் தங்கள், அச்சம், பயம், குழப்பம், தோஷம் யாவும் அறவே நீங்கித் தெளிவும் மகிழ்ச்சியும் பெற்றனர். அன்று தேவர்கள் பெற்ற பலனை இன்று பிரதோஷ தரிசனத்தின் மூலம் அருளன்பர்கள் பெறுகின்றார்கள்.

பரமன் இவ்வாறு தேவர்களுக்காகத் திருநடனம் ஆடியது சனிக்கிழமையாகும். ஆகையினால் தான் சனிப்பிரதோஷம் சிறப்புடையது என்றும் மகாப்பிரதோஷம் என்றும் போற்றப்படுகின்றது.

பிரதோஷ நாளன்று திருமால் கயிலாயத்தில் இருந்ததை நினைவூட்டும் வகையில் இன்றும் ஒவ்வொரு பிரதோஷ நாள் மாலை யிலும் பெருமான் கோவிலில் திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஐதீகம் பின்பற்றப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ வழிபாட்டின் மகிமை

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடபதேவரின் இரு கொம்பு களுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடனம் புரிந்தார். அப்பொழுது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரமதேவர் தாளம் போட்டார். இலட்சுமிதேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள் முனிவர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், திசைபாலகர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபடுகிறார்கள்.

இயக்கர் கின்னரர் யமனொடு - வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானரா நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப் பொன்றின்றி நின் திருவடியிணை
யர்ச்சித் தாற்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூரு ளானே.

- சுந்தரர்.

தேவர்கள் பிரதோஷ வழிபாடு செய்வதோடன்றி அவ்வழிபாட்டிற் குத் தாங்களே முன்வந்து உதவுகிறார்கள் என்பதை பிரமோத்தரகாண்டம் தெரிவிக்கிறது.

வாக்தேவீ த்ருதவல்லகீ, சதமகோ
வேணும் தகத் மத்மஜ
தாலோன் னித்ரகரோ, ராம பகவதீ
கேயப்யோ காஞ்சி தா
விஷ்ணுஸ் ஸாந்தரத் ம்ருதங்க வாதனபடுர்
தேவாஸ் ஸமந்தாத் ஸ்திதா
ஸேவந்தே தமனுப் பிரதோஷ ஸமயே
தேவம் ம்ருடாணி பதிம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி, இந்திரன், பிரமதேவன், திருமால், இலக்குமி இவர்கள் எல்லோரும் இதில் கலந்து கொள்கிறார்களென இச்சுலோகம் தெரிவிக்கிறது.

01. வாக்தேவி - சரஸ்வதி
த்ருத - (தனது கையில்) வைத்துக் கொண்டு
வல்லகி - வீணை வாசிக்க

02 சதமகோ - இந்திரன்
வேணும் - புல்லாங்குழலை
தக்கத் - தன்னிடம் வைத்துக் கொண்டு ஊத

03. பத்மஜ - பிரமதேவன்
தால - தாளத்தை
உன் நிக்ரகா - கையால் அடித்துக் கொண்டிருக்க

04. ராம பகவதீ - இலக்குமிதேவி
கேயம் - பாடல்களை
ப்ரயோக அஞ்சிதா - தீவிரமாகப் பாடிக் கொண்டிருக்க

05. விஸ்ணு - திருமாலானவர்
ஸாந்தர மிருதங்க - சிறந்ததொரு மிருதங்கத்தை
வாதன படு - சிறந்த வகையில் கொட்டிக் கொண்டிருக்க
மிருடானி - பார்வதி தேவியாரின்
பதிம் - பதியாகிய
தம்தேவம் - அத்தகைய சிவருமானை
அனுப்பிரதோஷ ஸமய - ஒவ்வொரு பிரதோஷ சமயத்திலும்

06. தேவ - தேவர்கள்
ஸமந்தாத் - எல்லாப் புறங்களிலும்
ஸ்திகா - நின்று கொண்டு
ஸேவந்தே - பக்திபூர்வமாக வழிபடுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிவபெருமான் செய்த திருநடனத்தின் போது திருமால் மத்தளம் வாசித்தனர். பிரம்மதேவர் தாளம் இட்டனர். இதனை அடியில் வரும் பாடலால் அறிக.

"வரத்தின் அருள் பெற்ற மத்தளமாயோன்தன் கரத்தினனி பொத்திக்
களிப்ப - நரைத் தலையோன் தாளம் பிடிக்க"

- கச்சி ஆனந்தருத்ரேசர் வண்டுவிடுதூது

பிரதோஷ வழிபாடு செய்தால் வறுமை, பயம், பாவம், மரண வேதனை இவையெல்லாம் ஒழிந்து விடும்: நலம் பல விளையும்.

இரண நல்குர விரும்பவ மிருப்பசி யுரோகம்
அரணுறும் பயங் கிலேசங் கேதமவ மிருத்து
மரண வேதனை யிவையெலா மகற்றென வணங்கி
புரணநாதனைப் பிரதோடத்திற் போற்றிடத்தகுமால்

- கடம்பவன புராணம்

பிரதோஷ காலத்தில் அடியிற் கண்ட தேவாரங்களை ஓதுக.

"நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கும் மத்தாகப்
பாகந்தேவ ரொடசுரர் படுகடலின் யெமக் கடைய
வேகநஞ்செழவாங்கே வெருவொடுமிரிந் தெங்குமோட
ஆகந் தன்னில் வைத்தமிர்தமாக்கு வித்தான் மறைக்காடே"

- திருஞானசம்பந்தர்.

பருவரை ஒன்று சுற்றி அரவங்கைவிட்ட
இமையோ ரிரிந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
கடுவா னெழுந்து விசை போய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பதிகார மொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே.

- திருநாவுக்கரசு நாயனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கோல்வரை மத்தென நாட்டிக்
கோரளவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிக விரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்தே பித்தநீ செய்த
சீலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில்திருப்புன் கூருளானே”

- சுந்தரர்.

“கோலால மாகிக் குரைகடல் வாயன் றெழுந்த
ஆலால முண்டா வைன் சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனேல் அயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவகாண் சாழலோ”

- மாணிக்கவாசகர்.

இனியோ நாமுயந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைகடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்.

- காரைக்காலம்மையார்.

அடியவராம் இமையவர்தம் கூட்ட முய்ய
அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே, செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரும் மலர் சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே ! காவாய் என்றும்

- பெரியபுராணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் செல்வம் உடையவர் சிலர் வறியவர் பலர் இதற்குக் என்ன காரணம்?

"இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்".

- திருக்குறள்.

இறைவனை நினைத்து உணர்ந்து நோற்பார் மறுபிறப்பில் தனவந்தராக இனிது வாழ்வார்கள்: அல்லாதவர் வறுமையில் வாடுவார்கள். ஆதலால் விரதத்தின் அவசியம் விளங்குகின்றது. சனிக்கிழமை தவிர மற்றக் கிழமைகளில் வரும் பிரதோஷ தினத்தன்று பிரதோஷ வேளையாகிய மாலை 04.00 மணி முதல் 06.00 மணிவரை சிவாலயத்தில் ஆலய வழிபாடு செய்தால் ஒருவருடம் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்த பலனும் சனிப்பிரதோஷத்தன்று பிரதோஷ வேளையில் சிவாலயத்தில் இந்தப் புத்தகத்தில் உள்ளவாறு இறை வழிபாடு செய்தால் 5 வருடம் தினம் தவறாமல் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும். ஆதலால் எல்லோரும் பிரதோஷ விரதம் இருந்து பெரும்பேறு பெறுவார்களாக!

## ஈஸ்வர தியானம்

ஓம் நம: ஸிவாய பரமேச்வராய
சசி சேகராய நம ஓம்
பவாய குண ஸம்பவாய
சிவ தாண்டவாய நம, ஓம்

## ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | ப்ரஹ்மமுராரி | ஸுராா்சித | லிங்கம் |
| | நிா்மலபாஸித | ஸோபித | லிங்கம் |
| | ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 02. | தேவமுநி ப்ரவ | ரார்ச்சித | லிங்கம் |
| | காமதஹும் | கருணாகர | லிங்கம் |
| | ராவண தர்ப்ப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 03. | ஸர்வஸுகந்தி | ஸலேபித | லிங்கம் |
| | புத்திவிவிர்த்தன | காரண | லிங்கம் |
| | ஸித்தஸுராஸுரே | வந்தித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 04. | கநக மஹாமணி | பூசித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| | தக்ஷஸுயக்ஞ | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 05. | குங்கும சந்தன | லேபித | லிங்கம் |
| | பங்கஜஹாரஸு | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 06. | தேவகணார்ச்சித | ஸேவித | லிங்கம் |
| | பாவைர்பக்திபிர் | ஏவச | லிங்கம் |
| | திநகர கோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 07. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வ ஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 08. | ஸுரகுரு ஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவநபுஷ்ப | ஸதார்சிவ | லிங்கம் |
| | பராத்பரம் | பரமாத்மக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

**தொல்லை யிலும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம்என்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏகன் னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகலவந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெங்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்ந்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காயிநின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்
சிறப்புறு மக்கள் சேர்வர்
இந்திர போகம் கிட்டும்
இணையிலா வாழ்வு தாகே!

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந் தெம்மைக் காப்பாய்

ஒன்பது கோள்களுக்கும் உயரிய பலன் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வளம் கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்

மாலைகள் ஏற்கவைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்க வைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையின் வண்ணப்பூவைச் சூடிடும் நந்திதேவா!
நாளும் நான் உனைதுதித்தேன் நாடிவந் தெம்மைக் காப்பாய்.

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல் வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தனின்நந்தி அழகிய நெகமும் நந்தி
குஞ்சர முகத்தான்தந்தை குந்திடும் ரிஷபநந்தி
தஞ்சமாய் உனையடைந்தேன் தயங்காது எமைக் காப்பாய்.

## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகள் எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர்போக்க வந்த நந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அறுகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக் காக்கவருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருபுன் கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர்நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் கணவனின் உள்ளக் குமுறல்

புன்னகை தவழும் புனிதவதியே
எண்ணித்தான் பார்க்கிறேன்
இதயம் குமுறுதம்மா!
கூடிவரும் உற்றாரை குமிண் சிரிப்பால்
கூட்டியே அரவணைத்த
வாடியவருக்கு வாழ்வளித்த வாருதியே!
வாடவிட்டுச் சென்றீரே !
நீயில்லாமல் எஞ்சிய நாட்கள்
எப்படிக் கழியுமோ, ஏங்குகின்றேன்
நெஞ்சம் பதைக்குதம்மா!

"தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல்
பிறர் நலம் பேணுதல்"
என்னும் கவிமணி சுப்பிரமணிய பாரதியாரின்
கவிதை அடிகளின் இலக்கணமாய்
அகத்தும் புறத்தும்
அமைந்தவள் நீயம்மா!
இல்லறமே நல்லறமாய்
இனிதாய் அமைத்தாயே!
சொல்லால் உன் சேவை
சொல்லத்தான் முடியுமோ?
அன்பால் எனை என்றும்
இனிதாய் அணைத்தனையே!
எங்கிருந்தாலும் உனை நான் மறவேன்
அங்கிருந்தும் எனை ஆட்கொள்வாய் நீயே!

**சிவகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவன நாதர் சிவன் ஆலயம்**

**சாவகச்சேரி சிவப்பிரம்மபூஷனம் சிவநெறிக் காவலர்**

**பிரம்மஸ்ரீ செ. தெட்சணாமூர்த்திக் குருக்கள் அவர்களின்**

# இரங்கற் செய்தி

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் குறளுக்கு எடுத்துக் காட்டாகத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இவ்வுலக பணி நிறைவுற்று அவ்வுலகப் பணிக்காக இறைவன் அழைத்துக் கொண்டார் இதுவே வாழ்க்கையின் நியதி. அதற்கமைய எமது மீசாலையில் வாழ்ந்த அமரர்கள் தில்லையம்பலம் மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வி திருமதி சிவகுமார் இந்திராதேவி அவர்கள் சாவகச்சேரி சந்திரசேகரப் பெருமானிடம் பக்தி மிகுந்தவர். பெருமானின் திருப்பணிகளைச் செய்வதற்கு தன்னாலான உதவிகளையும் செய்து பிரதோஷ பூசைகளையும் நன்றாகச் செய்வித்து எந்தவொரு பிரதோஷ பூசைக்கு உபயம் இல்லையோ அந்தப் பூசைகளையெல்லாம் தானே முன்னின்று செய்து வந்தவர். அதுமட்டுமல்ல அயலிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் தனது பணியைச் செய்து தனது உறவுகளையும் மிகுந்த பாசத்துடனும், பரிவுடனும் பாதுகாத்து வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமி இந்திராதேவி அவர்கள். அவருடைய இழப்பு அவருடைய குடும்பத்தினருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா மார்கழித் திருவாதிரை நாளில் இறைவனடி சேர்ந்தது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

***"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்***
***வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"***
***ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!***

**பிரம்மஸ்ரீ S.தெட்சணாமூர்த்திக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு சி. கமலநாதன் (ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சு - வடக்கு கிழக்கு மாகாணம்) அவர்கள் வழங்கிய**

# நினைவுச்செய்தி

திருமதி இந்திராதேவி சிவகுமார் அவர்கள் கிளி / ஆனையிறவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆங்கிலபாட ஆசிரியராகக் கடமையாற்றிய காலப்பகுதியிலேயே எனக்கு அறிமுகம் ஆனார்.

அவர் இந்தியப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டதாரியாக இருந்த போதும் அவர் பட்டதாரியாக இலங்கைக்கு வந்த காலப் பகுதியில் இங்கிருந்து அரசியல் சூழ்நிலை காரணமாகப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற முடியாமல் போனது.

அக்காலப் பகுதியில் இந்தியாவில் பட்டம் பெற்ற ஏராளமான இளைஞர்கள் வேலை வாய்ப்பு ஏதும் இன்றித் தவித்தனர். இறுதியில் அவர்களை அரசாங்கம் மாணவ ஆசிரியர்கள் **(Pupil Teachers)** என நியமனம் வழங்கி ரூபா 100 ஐ மாத்திரம் மாத ஊதியமாக வழங்கியது. திருமதி. இந்திராதேவி அவர்களும் இவ்வாறு நியமனம் பெற்று பின்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலப் பாட ஆசிரியராகப் பயிற்சி பெற்று ஆங்கில பாட ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் இந்தியாவில் பட்டப்படிப்பு ஆங்கிலமொழி மூலத்தில் அமைந்திருந்த துடன் பட்ட இறுதிப் பரீட்சை வரை ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்று அதில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

இதன் காரணமாக திருமதி இந்திராதேவி அவர்கள் ஒரு சிறந்த ஆங்கில பாட ஆசிரியையாகத் திகழ முடிந்தது. இதனால் இவரின் சேவை கூடுதலாகப் பிரயோசனப்படக் கூடிய கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்திற்கு 1987 இல் இடமாற்றம் பெற்றார். இதனால் அவரது சேவையைக் கூடிய எண்ணிக்கை மாணவர்கள் பெறக் கூடியதாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 இற்குப் பின்னர் அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றதாலும் நான் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து திருகோணமலைக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றதாலும் அவருடன் எனக்குத் தொடர்புகள் அற்றுப் போனது.

அன்னாரின் பிரிவினால் தவித்திருக்கும் அவரது கணவருக்கும் உறவினர்களுக்கும் மனச் சாந்தியை இறைவன் அளிக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவனுடன் கலந்து பேரின்பமடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

***ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!***

## திரு.இ.கயிலைநாதன்( ஓய்வு நிலை அதிபர்) (ஆங்கிலம்) கல்வி அதிகாரி தென்மராட்சி அவர்களின்

# இரங்கற் செய்தி

மீசாலையைச் சேர்ந்த இந்திராதேவி சிவகுமார் அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி பலரையும் கவலை அடையச் செய்துள்ளது. இவர் தனது இளமைப் பராயம் முதல் கல்வியில் சிறந்து விளங்கி தனது உயர் பட்டப்படிப்பினை இந்தியாவில் பூர்த்தி செய்திருந்தார். கல்விப் பணியே சிறந்த பணியென நம்பி ஆசிரியராகப் பல காலம் பணியாற்றி சில காலங்களுக்கு முன் ஓய்வு பெற்றிருந்தார். ஆங்கிலப் பாடத்தினை தமது மாணவர்களுக்கு கற்பிப்பதில் வல்லவராக செயற்பட்ட ஒரு ஆசிரியராவார்.

இவர் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். அமைதியான போக்கும், அடக்கமான இயல்பும் இவரது அணிகலன்களாகும். தான் கற்பித்த மாணவர்களை அன்பால் கவர்ந்தவர். அவ்வாறே தனது உயரிய பண்புகளினால் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களின் மனத்தில் நிறைந்தவராவர்.

இவரின் மறைவால் துயருற்றிருக்கும் கணவர், ஏனையோருடன் இணைந்து இவர்களின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையுணர்வு மிக்க நல்லாசிரியர்

நான் மிருசுவில் அ.த.க பாடசாலையில் உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றிய 1994 - 1996 காலப் பகுதியில் அமரர் திருமதி இந்திராதேவி சிவகுமார் அவர்கள் இப்பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

இந்நியப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலத் துறையில் விசேட பயிற்சி பெற்றுள்ள ஆங்கிலப் புலமைமிக்க ஆசிரியராவார்.

மேற்படி பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய காலப் பகுதியில் இவரது சேவை அளப்பெரியது. போக்குவரத்து வசதி குன்றிய மேற்படி கஷ்டப் பிரதேசப் பாடசாலைக்கு 12 **Km** தூரத்திலுள்ள மீசாலையிலிருந்து தினசரி காலை துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு வந்து தனது கற்பித்தல் பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டார்.

சக ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகும் இவர் மாணவர்களின் கற்றல் இடர்பாடுகளை பரிவுடன் கண்டறிந்து அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவராவார்.

பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பை வழங்கிய இவர் தான் வாழ்ந்த அயற் சமுதாயத்துடனும் சிறந்த நட்புறவைப் பேணி வந்துள்ளார். சமுதாயத்திற்காக இவர் ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியதாகும்.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.இ. சத்தியேந்திரம்பிள்ளை**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Ode To MRS.INTHIRATHEVI SIVAKUMAR**
**(BSC) INDIA.**

A Sweet Smile and a heart of gold.
A true friendship can't be bought or sad.

Birth and Death are the main parts
In God's Creation of the world.
You are now Safe in the hands of God.

With Peace and Happiness forever

**Mr & Mrs.P.Shanmuganathan**
**(J.P. Whole Island)**
**Tri Lingual**
**(Sworn Translator)**
**Dutch Rd,**
**Chavakachcheri.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது பேரன்பிற்கும் பாசத்திற்குரிய

**எமது குடும்பத் தலைவி**

## அமரர். இந்திராதேவி சிவகுமார்

**(ஓய்வுபெற்ற ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை)**

**அவர்கள்**

எம்மை விட்டுப் பிரிந்த பிரிவுத் துயரச் செய்தி கேட்டு உடன் வந்து துணையாய் நின்று ஆறுதல் கூறி எம்முடன் இணைந்து துயரத்தில் பங்குபற்றிய அயலவர்களுக்கும், செய்தி அறிந்து நேரில் வந்து கண்ணீர் உதித்தவர்களுக்கும், தொலைபேசி, பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக் கும், இறுதிக் கிரியையின் போது சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும், அவ்வேளையில் ஆறுதல் அளித்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குபற்றி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், மற்றும் இம்மலரை வடிவமைத்துத் தந்த கோண்டாவிலில் அமைந்துள்ள சிவரஞ்சனம் ஒவ்செற் ஸ்தாபனத்தாருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*நன்றி*

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*


*இங்ஙனம்*
*குடும்பத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Sivaranjanam 620

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, [illegible] T.P.: 021 222 6722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org